தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, பங்குனி 7, திருவள்ளுவர் ஆண்டு - 2048

2017 மார்ச் 20, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.”

ஒருவர் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் கிடைக்கும் சிறப்புகள் அந்தப் பிறவிக்கு மட்டுமல்லாமல் எழுகின்ற பல பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. சா. மெய்யப்பன் அவர்கள் 1–2–2017 அன்றும், திரு. ஆ. பாலையா அவர்கள் 8–2–2017 அன்றும், திரு. இரா. வில்வநாதன் அவர்கள் 11–3–2017 அன்றும் மற்றும் திரு. வி.எ. செல்லையா அவர்கள் 11–3–2017 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. சா. மெய்யப்பன் அவர்கள் 1967 முதல் 1971 வரை காரைக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆ. பாலையா அவர்கள் 1970 முதல் 1971 வரையிலும், 1971 முதல் 1976 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1991 முதல் 1996 வரையிலும் குளச்சல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. இரா. வில்வநாதன் அவர்கள் 2001 முதல் 2006 வரை சோளிங்கர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள். மேலும், 2–3–2002 முதல் 29–8–2002 வரை ஊரகத் தொழில் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. வி.எ. செல்லையா அவர்கள் 2001 முதல் 2006 வரை மருங்காபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

பறவைகள் சரணாலயம்

***4673—திரு. மு. சக்ரபாணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, எடச்சேரி கிராம கழுவெளியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?